**16.02.2026**

**O.S.No.111/2001 and 48/2005**

**பி.வா.சா.1 : கோவிந்தன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) எனது தந்தை தாயார் பெயர் பெருமாள் சின்னப்பிள்ளை என்றால் சரிதான். அவர்களுக்கு என்னுடன் சேர்ந்து 4 மகன்கள் தான். பெண்கள் இல்லை. அப்பம்மசமுத்திர கிராம எல்லையில் என் அப்பாவிற்கு கொஞ்சம் பூர்வீக சொத்து இருந்தது என்றால் சரிதான். தென்னங்குடிபாளையத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் என் அம்மா பெயரில் கிரயம் வாங்கியது என்றால் என் அம்மா பெயரிலும் உள்ளது. என் அப்பா பெயரிலும் தனியாக கிரய சொத்து உள்ளது. என் அம்மா பெயரிலும் தனியாக கிரய சொத்து உள்ளது. என் அப்பா மற்றும் அம்மா பெயரிலும் கூட்டாக கிரய சொத்து உள்ளது. என் அப்பாவை விட என் அம்மா தான சொத்துக்களை வாங்கி நிர்வகித்தார் என்றால் சரிதான். நல்லது கெட்டது அனைத்தையும் என் அம்மா தான் நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். நரசிங்கபுரம் கிராம எல்லையில் உள்ள சொத்து 01.05.1983 ல் என் அம்மா பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 10 வருடம் கழித்து கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி 1986 ல் ஒரு வீடு என் அம்மா கட்டினார் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு அப்பா அம்மா இருவரும் சேர்ந்து தான் லோன் வாங்கி கட்டியதாக சொல்கிறார். அந்த கடன் பத்திரத்தில் என் அம்மா பெயரில் கிரயம் அந்த கடனுக்கு நாங்கள் வாரிசு என்ற முறையில் கையெழுத்து போட்டோம்.

2) மேற்படி வீட்டை தான் ரங்கநாதனுக்கு 1995 ல் எனது அம்மா தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மா 2001 ல் தான் அதைப்பற்றி தெரிவித்தார். மேற்படி சொத்தினை கிழபுறம் பகுதியினைதான் ஒரு செட்டில்மெண்ட் பத்திரமாகவும் மேற்புறம் பகுதி மற்றொரு தான பத்திரமாகவும் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்னிட்டு எனது தாயார் அதை தெரிவித்தார். அந்த இடம் இரண்டும் சேர்ந்து 1500 ச.அடி

என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 4 வருடம் கழித்து எனது அம்மா 1998ல் மின் இணைப்பு எண் பிழை என்றும் கதவு எண் பிழை என்றும் சொல்லி இரண்டு பிழைத்திருத்த பத்திரங்கள் எழுதினார் என்றால் அதை பற்றி தெரியாது. மேற்படி பத்திரங்களை எனது அம்மா தான் எழுதி வைத்தார் என்றால் என் அம்மாவை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார்கள்.

3) மேற்படி இரண்டு தானபத்திரங்களையும் ரத்து செய்த பத்திரங்களையும் நான் படித்துள்ளேன். நான் பி.ஏ., பி.எட் படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் தான பத்திரத்தை எழுதி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனது அம்மாவுக்கு கையெழுத்து போட தெரியும். ஆனால் படிக்க தெரியும். மேற்படி பத்திரத்தில் எழுதி சுவாதீனத்தை ஒப்படைத்து மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு கீழ்கண்ட சொத்துக்களை அடைந்து கொண்டாய் என்று அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் அடைமானம் பத்திரம் என்று சொல்லி ஏமாற்றி வாங்கி கொண்டார்கள். மேற்படி எழுதி வாங்கிய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் எழுதப்பட்டுள்ளது என்றால் ரங்கநாதன் சௌகரியத்திற்கு எழுதி வாங்கப்பட்டுள்ளது.

4) மேற்படி தான பத்திரத்தை ரத்து செய்ய எழுதி கொடுத்தவருக்கு உரிமை இல்லை என அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவருக்கு படிக்க தெரியாது. அவரை ஏமாற்றி எழுதி கொண்டார்கள். இதே போல வாசகத்தை தான் இரண்டு தான பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அவருக்கு படிக்க தெரியாது. அவரை ஏமாற்றி எழுதி கொண்டார்கள். தான பத்திரம் இரண்டிலும் பிழை திருத்த பத்திரங்களையும் இதே போல வாசகத்தை தான் இரண்டு தான பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அவருக்கு படிக்க தெரியாது. தான பத்திரம் 1995 மற்றும் பிழை திருத்த பத்திரம் 1998ல் எழுதப்பட்டுள்ள நிலையில் தன்னை ஏமாற்றி எழுதப்பட்டதாக எதும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். அவருக்கு படிக்க தெரியாது ஏமாற்றி எழுதி வாங்கி உள்ளார்கள்.

5) மேற்படி இரண்டு தான பத்திரஙகளை என் தாயார் தான ரத்து பத்திரம் மூலம் ரத்து செய்துள்ளார் என்றால் சரிதான் (வா.சா.ஆ.5,6). ரத்து பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த (வா.சா.ஆ.5,6) ரத்து பத்திரங்களில் எனது அம்மா விருப்பத்திற்கு ஏற்ப எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்று எழுதி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரங்களில் ரங்கநாதன் என்னை ஏமாற்றி தான் எழுதி வாங்கி கொண்டார் என்ற வாசகம் எதுவும் வா.சா.ஆ.5,6 ல் இல்லை. மேற்படி ரத்து பத்திரம் எழுத போகும்போது நான் செல்லவில்லை. அதைப்பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து அமினா வந்து கையெழுத்து வாங்கும்போது தான் எனக்கு இந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. ரங்கநாதன் ஆத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.95/2003 என்ற பாகப்பிரிவினை வழக்கு தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கு மட்டும் வழக்கு போட்டு இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னை பிரதிவாதி தரப்பில் 1 வது சாட்சியாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னை அந்த வழக்கில் 24.03.2025 ல் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதில் நான் அளித்த சாட்சிய வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யய்ப்படுகிறது. அந்த குறுக்கு விசாரணையில் 5 வது பக்கத்தில் 6 வது பத்தியில் கண்டுள்ள சங்கதிகள் "கடந்த 1995 ம் ஆண்டு எழுதி வைத்த தான பத்திரத்தை கடந்த 2001 ம் ஆண்டு நாங்கள் அனைவரும் எனது தாயாரை அழைத்து கொண்டு பத்திர பதிவு அலுவகத்திற்கு சென்று ரத்து செய்துவிட்டோம் என்றாலும் அந்த ரத்து செல்லாது என்று கோரி ரங்கநாதன் ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தல் அ.வ.எண்.111/2001 என்ற வழக்கை எங்களுக்கு எதிராக தாக்கல் செய்து தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் வழக்கு நிலுவையில் இருப்பது உண்மை தான்“ என்றால் சரிதான்.

6) எனக்கு எனது தாயார் ரங்கநாதனுக்கு தான செட்டில் பத்திரம் 1995 ல் எழுதி வைத்தது தெரியும் என்றும் பின்னிட்டு தான பத்திரத்திற்கு பிழைத்திருத்தல்

பத்திரங்கள் இரண்டு எழுதிய விவரம் தெரியும் என்றும் பின்னிட்டு மேற்படி தான ரத்து பத்திரங்கள் செய்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும் இந்த விவரங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்பு கொண்டு விட்டு தற்போது மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரத்து செய்த தான பத்திரத்தில் உள்ள சொத்துக்களை சிவாநந்தம் என்பவர் பெயரில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து அமினா வந்து கையெழுத்து வாங்கும்போது தான் எனக்கு தெரியும்.

7) மேற்படி கிரய பத்திரத்தில் 4.50 லட்சம் விற்பனை செய்துள்ளதாக கிரயம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 24.05.2001ல் ரத்து செய்யப்பட்ட அன்று தான் இந்த கிரயபத்திரமும் அடுத்த பத்திரமாக கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மாவிற்கு ரங்கநாதனுக்கு தான செட்டில் பத்திரம் 1995 ல் எழுதி வைத்தது தெரியும் என்றும் பின்னிட்டு தான பத்திரத்திற்கு பிழைத்திருத்தல் பத்திரங்கள் இரண்டு எழுதிய விவரம் அவர் விருப்பப்படி சுய நினைவுடன் பத்திரத்தில் தன்னை தெரிந்து அவர் விருப்பப்படி எழுதி வைத்தார் என்றும் பின்னிட்டு தான ரத்து பத்திரமும் சிவாநந்தம் பெயருக்கு எழுதி வைத்த கிரயம் பத்திரமும் தான் எங்களால் தயார் செய்யப்பட்டு என் தாயாருக்கு விருப்பத்திற்கு மாறாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

8) ரங்கநாதன் பெயருக்கு எழுதி வைத்த தான பத்திரத்தை ரத்து செய்வதற்கு என் தாயாருக்கு உரிமை இல்லை என்றும் பின்னிட்டு அந்த தான பத்திரத்தையும் பிழை திருத்தல் பத்திரங்களையும் ரத்து செய்வதற்கும் பின்னிட்டு சிவாநந்தம் பெயருக்கு கிரயம் பத்திரம் எழுதவும் என் தாயாருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா அவ்வாறு ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் நீதிமன்றத்தின் மூலம் தான் ரத்து செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக சிவாநந்தம் பெயரில் எழுதிவைத்தோம் என்றும் அதை தெரிந்து 27.07.2001ல் என் தாயாரையும் சிவாநந்தத்தையும் அழைத்து வந்து அந்த கிரய பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் அமினா

கையெழுத்து வாங்கும் போது தான் தெரியும். மேற்படி ரத்து பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். அந்த கிரய ரத்து பத்திரத்தில் கிரய தொகை கொடுக்கவில்லை என்றும் சுவாதீனம் கொடுக்கவில்லை என்றும் சொல்லி அந்த பத்திரத்தை ரத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

9) சின்னப்பிள்ளையை ஏமாற்றி கிரயதொகை கொடுக்காமல் சுவாதீனம் கொடுக்காமல் பெயரளவில் ஒரு கிரய பத்திரம் எழுதியதால் தான் அதை ரத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு சின்னப்பிள்ளை லோன் வாங்கியதற்கு நான் ஏதேனும் தவணை கட்டியதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அம்மா பணம் கொடுப்பார் நான் கட்டி வந்துள்ளேன்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.16 17:10:25 +0530

**Subordinate Judge, Attur.**